

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: |
|---|---|
| | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** — **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



**Saidai Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

| Question Booklet No: | Register Number: | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series

## This Booklet Contains

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
### 7 ஆம் வகுப்பு - பழைய புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்
   (A) 8
   (B) 10
   (C) 4
   (D) 6

2. மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செயல்களாக திருகடுகம் கூறுவது.
   1. நீராடிய பின் உண்ணுதல்
   2. பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல்
   3. உடல் வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல்

   (A) 1 மட்டும் சரி
   (B) 2 மட்டும் சரி
   (C) 3 மட்டும் சரி
   (D) அனைத்தும் சரி

3. நீயின்றி மண்ணுண்டோ, விண்ணுன்டோ, ஒளியுண்டோ, நிலவுமுண்டோ - என்ற பாடல் வரிகள் ந.பிச்சமூர்த்தி அவர்களின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது.
   (A) ந.பிச்சமூர்த்தி கவிதைகள்
   (B) பொங்கல் வழிபாடு
   (C) இரட்டை விளக்கு
   (D) பூக்காரி

4. பேச்சு வழக்கு    எழுத்து வழக்கு
   (A) தலகாணி – தலையணை
   (B) வேர்வை – வியர்வை
   (C) விளக்கு – வெளக்கு
   (D) தண்ணீ – தண்ணீர்

5. மலை என்பது ------- பெயர்
   (A) இடுகுறிப்பொதுப்பெயர்
   (B) இடுகுறிசிறப்புப்பெயர்
   (C) இகாரணப்பொதுப்பெயர்
   (D) காரணச் சிறப்புப்பெயர்

6. பொருத்துக.

a. நெல் - 1. ஏரோட
b. கரும்பு - 2. நண்டோட
c. வாழை - 3. தேரோட
d. தென்னை - 4. வண்டியோட

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 1 2 4

7. பிரித்தெழுதுக. யாதொன்றும்

(A) யா + என்றும்
(B) யா + தொன்றும்
(C) யாது + என்றும்
(D) யாதொன் + றும்

8. தவறானது? வழுக்களில்

(A) அரசர் பலர் வந்தார்
(B) மயில்கள் ஆடின
(C) கனிமொழி பாடம் படித்தாய்
(D) ஔவையார், அதியமானிடம் பரிசில் பெறச் சென்றார்.

9. பாரதிக்கு பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை புதிய சிறப்புகளைச் சேர்ந்திருக்கின்றன? கீழ்கண்ட நபர்களில் யார்.

(A) கல்கி
(B) வல்லிக்கண்ணன்
(C) தருமுசிவராமு
(D) ந.பிச்சமூர்த்தி

10. ஆய்த எழுத்து குறித்து.

1. முப்புள்ளி, முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுவர்.
2. உயிரோடும் மெய்யோடும் சேர்ந்து இயங்கும்.
3. இவ்வெழுத்துக்கு முன் குறிலும், அதன் பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்

(A) 1 மட்டும் தவறு
(B) 2 மட்டும் தவறு
(C) 3 மட்டும் தவறு
(D) அனைத்தும் சரி

11. கீழ்க்கண்ட கூற்று சரியானவை எது:
   1. மதுரைக்குக் கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன.
   2. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந்ததால் நான்மாடக் கூடல் என்றும் பெயர் வழங்கலாயிற்று
   3. கன்னிகோவில், கரியமால்கோவில், காளிகோவில், ஆலவாய்க்கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்கு காவலாக அமைந்ததால் நான்மாடக்கூடல் என்றும் பெயரமைந்தது.

   (A) 1 மட்டும் சரி
   (B) 2 மட்டும் சரி
   (C) 3 மட்டும் சரி
   (D) 1 2 3 சரி

12. மல்லிகைப் பந்தரின் கீழே தங்கினான் - என்ற தொடரில் பயின்று வந்துள்ளது.
   (A) முதற்போலி
   (B) இடைப்போலி
   (C) இறுதிப்போலி
   (D) முற்றுப்போலி

13. பொருந்தாதது எது.
   (A) செய்ய சொன்னான்
   (B) எழுத தொடங்கினான்
   (C) விளையாட பார்த்தான்
   (D) கேளா செவி

14. அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை.
   1. வறியவர்க்குப் பொருளை அளித்தல்
   2. இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல்
   3. எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல்

   மேற்கண்டவற்றில் சரியானவை எது:
   (A) 1 மட்டும் சரி
   (B) 2 மட்டும் சரி
   (C) 3 மட்டும் சரி
   (D) அனைத்தும் சரி

15. முறையான தொடர் எது:
   (A) கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பால்
   (B) பார்க்காத பயிறும் கேட்காத கடனும் பாழ்
   (C) கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்
   (D) பார்க்காரத பயிறும் கேட்காத கடனும் பாள்

16. இலக்கண வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்.
   (A) 4
   (B) 6
   (C) 8
   (D) 2

17. தென்னை என்பது ------
   (A) இடுகுறிசிறப்புப்பெயர்
   (B) இடுகுறிகாரணப்பெயர்
   (C) காரணப்பொதுபெயர்
   (D) காரணசிறப்புப்பெயர்

18. சீவகசிந்தாமணியின் ஆசிரியர் யார்.
   (A) நாதமுனி
   (B) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
   (C) திருத்தக்கதேவர்
   (D) என்னாயினப் புலவர்

19. ------ சொற்கள் தனித்தியங்காமல் பெயரையோ வினையையோ சார்ந்து வரும்.
   (A) இடைச்சொல்
   (B) உரிச்சொல்
   (C) திரிச்சொல்
   (D) திசைச்சொல்

20. வந்தி என்னும் பெயருடைய கிழவிக்காக மண்சுமந்து ----- மன்னனிடம் இறைவன் அடிப்பட்டார்.
   (A) சேரர்
   (B) சோழர்
   (C) பாண்டியர்
   (D) பல்லர்

21. தவறான இணை எத்தனை (பிறமொழிச் சொல் - தமிழ்ச்சொல்)

1. அனுமதி - இசைவு
2. ஆரம்பரம் - தொடக்கம்
3. ஆஸ்தி - சொத்து
4. இம்சை - துன்பம்
5. நெஞ்சகம் - இருதயம்
6. இறைவன் - ஈசன்
7. விருந்தோம்பல் - உபசரித்தல்

(A) 3 இணை
(B) 4 இணை
(C) 5 இணை
(D) 2 இணை

22. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது:

1. எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
2. ஈறுகெட்ட எழுர்மறைப் பெயரெச்சம் பின் வல்லினம் மிகும்.
3. அகர ஈற்று வினையெச்சம் பின் வல்லினம் மிகும்.
4. முற்றுப் பெறாத வினையெச்சம், பெயரெச்சம் பின் வல்லினம் மிகும்.

(A) 1 மட்டும் தவறு
(B) 2 மட்டும் தவறு
(C) 3 மட்டும் தவறு
(D) 4 மட்டும் தவறு

23. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. வருணன் மதுரையை அழிக்க 4 மேகங்களை அனுப்பினான்
2. பாண்டியன் முறைவிட இறைவன் 7 மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார்.
3. எந்நாட்வரும் எவ்வூரினரும் வந்து கூடும் வளமான நகர் என்பதால் கூடல் என்றும் பெயர் பெற்றது.
4. மதுரைக்கு ஆலவாய் என்று பெயர் அமைந்ததாத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

(A) 1, 2 சரி
(B) 3, 4 சரி
(C) 3, 1 தவறு
(D) 2, 4 தவறு

24. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. திருத்தக்கதேவர் சோழ அரச குலத்தில் பிறந்தவர்
2. சமண சமயத்தைச் சார்ந்தவர்
3. காலம் 10ம் நூற்றாண்டு
4. திருத்தக்கதேவர் பாடிய மற்றொரு நூல் - நரிவிருத்தம்

(A) 1, 2 சரி
(B) 3, 4 சரி
(C) அனைத்தும் தவறு
(D) அனைத்தும் சரி

25. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. கட்புலனாம் இன்பத்தைத் தரவல்லது.
2. கைவழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல.
3. இக்கலையில் வல்லவராயக் கூத்தரும் விறலியரும் திகழ்ந்தனர்.

மேற்கண்ட வாக்கியங்களுடன் தொடர்புடைய கலை எது:

(A) பேச்சுக்கலை
(B) ஓவியக்கலை
(C) சிற்பக்கலை
(D) ஆடற்கலை

26. புதரில் விதைத்த விதை

1. அறம் தவறானது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை
2. ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம்
3. மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு

மேற்கண்டவற்றில் சரியானவை எது.

(A) 1 சரி
(B) 2 சரி
(C) 3 சரி
(D) 1, 2, 3 சரி

27. சரியான தொடர் எது.

(A) இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது.
(B) கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்
(C) ஆகாசத்தில் பட்சி பறந்தது
(D) பூக்களின்றி வழிபாடு உண்டா?

28. திரு.வி.க பற்றிய கூற்றுகளில் சரியானது எது.
    1. துள்ளம் என்ற ஊரில் பிறந்தார்
    2. வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார்.
    3. நவசக்தி இதழ்களில் துணை ஆசிரியராக பணியாற்றினார்.
    4. தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார்.

(A) 1 சரியல்ல
(B) 2 சரியல்ல
(C) 3 சரியல்ல
(D) 1, 2, 3, 4 சரி

29. குமரகுருபரர் எழுதிய நூல்களில் தவறானது?
    1. நீதிநெறி விளக்கம்
    2. முத்துக்குமராசுவாமி பிள்ளைத்தமிழ்
    3. கந்தர் கலிவெண்பா
    4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
    5. மதுரைக்கலம்பகம்

(A) 1 3 5
(B) 2 4 5
(C) 1 2 3
(D) மேற்கண்ட எதுவுமில்லை

30. தோய்மயிர் என்பது
(A) வேற்றுமை
(B) இன்முள்ள அடைமொழி
(C) இனமில்லா அடைமொழி
(D) வினைத்தொகை

31. “மாசு” என்ற சொல்லின் பொருளுடன் தொடர்பில்லாதது எது.
(A) குற்றம்
(B) தீது
(C) அழுக்கு
(D) தூய்மை

32. பூக்களில் சிறந்த பூ பருத்திப்பூ என்று கூறியவர் யார்.
(A) குமரகுரபர்
(B) திரு.வி.க
(C) சுவாமிநாத தேசிகர்
(D) காந்தி

33. மருத நிலத்தில் எவை எவைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

1. உழவுத்தொழில் பற்றி
2. சமுதாயம் பற்றி
3. உணவு பொருட்கள்
4. காளைகளின் பல்வேறு பெயர்
5. செல்லப் பிராணிகள்
6. விதைகளின் பெயர்
7. மன்னர்கள் பற்றி
8. மீன் வகைகள்

(A) 1 3 5 7
(B) 2 4 6 8
(C) 1 2 4 6 8
(D) அனைத்தும்

34. மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை எது.

(A) நாலடியார்
(B) நாண்மணிக்கடிகை
(C) திருக்குறள்
(D) தொல்காப்பியம்

35. நாளங்காடி, அல்லாங்கடி முதலியன எந்த ஊரில் இருந்தது.

(A) பூம்புகார்
(B) கொற்கை
(C) திருச்சி
(D) மதுரை

36. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் - என்று பாடியவர் யார்.

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) சுத்தானந்த பாரதி
(D) கவியரசு

37. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. இனிமையாகச் சொல்லி திருத்துவதில் வல்லவர் - திருவள்ளுவர்
2. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர் - கோவூர்கிழார்
3. தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு, திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள் தமிழ் என்னை ஈர்த்தது குறளோ என்னை இழுந்தது – கிரௌல்

(A) 1, 2 சரி
(B) 3, 4 சரி
(C) 1, 2, 3 தவறு
(D) 1, 2, 3 சரி

38. பொருத்துக.

a. சிவபெருமான் - 1. மலையத்துவசன் மகன்
b. செவ்வேள் - 2. சுந்திர பாண்டியன்
c. உமையம்மை - 3. உக்கிர குமாரப் பாண்டியன்

(A) 1 2 3
(B) 2 3 1
(C) 3 2 1
(D) 2 1 3

39. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

1. எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே – கால்டுவெல்
2. தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும் என்று கூறியவர் - வள்ளலார்
3. பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் பாண்டிய நாட்டு தமிழ்ச் சொற்கள்.

மேற்கண்டவற்றில் சரியானது எது:

(A) 1 சரி
(B) 2 சரி
(C) 3 சரி
(D) மேற்கண்ட அனைத்தும் தவறு

40. எத்தனை இணை சரியானது.
   1. தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை – சிறுபாணாற்றுப்படை
   2. ஓங்குசீர் மதுரை, மாண்புடை மரபின் மதுரை – சிலப்பதிகாரம்
   3. தமிழ்கெழுகூடல் - புறநானூறு

(A) 1 இணை
(B) 2 இணை
(C) 3 இணை
(D) அனைத்து இணையும்

41. தருக்கும் செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கு வீரமும் தீரமும் வாய்ந்த நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டை ----- என்னும் சங்க இலக்கிய நூல் வருணிக்கிறது.

(A) கலித்தொகை
(B) புறநானூறு
(C) குறுந்தொகை
(D) அகநானூறு

42. சரியான வரிசை எது?

(A) மலை குன்று கரடு பாறை
(B) மலை கரடு குன்று பாறை
(C) கரடு மலை குன்று பாறை
(D) பாறை குன்று மலை கரடு

43. கீழ்க்கண்ட கூற்றை கவனி.
   1. தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றி தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழி எனப்படும்.
   2. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி, புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம்

மேற்கண்ட வாக்கியங்களுடன் தொடர்புடையவர்

(A) கால்டுவெல்
(B) பரிதிமாற்கலைஞர்
(C) தேவநேயபாவாணார்
(D) மறைமலையடிகள்

44. ஊமத்தும் பூவை விரும்பிச் சூடும் இறைவன் யார்.

(A) முருகன்
(B) திருமால்
(C) சிவன்
(D) விஷ்ணு

45. கீழ்க்கண்ட கூற்றை கவனி.
   1. நிலவளமும் நீர்வளமும் பயிர் வளமும் செறிந்த மருதநிலம்
   2. ஆடு மாடுகள் அடைக்கப்படுமிடம் பட்டி எனப்படும்.
   3. கடற்கரை பேரூர் பாக்கம்
   4. கடற்கரை சிற்றூர் பட்டினம்

   மேற்கண்டவற்றில் சரியானவை எது
   (A) அனைத்தும் சரி
   (B) அனைத்தும் தவறு
   (C) 1, 2 சரி
   (D) 3, 4 தவறு

46. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. சேரநாடு | – | 1. சான்றோர் உடைத்து |
| b. சோழநாடு | – | 2. முத்துடைத்து |
| c. பாண்டிய நாடு | – | 3. சோறுடைத்து |
| d. தொண்டைநாடு | – | 4. வேழமுடைத்து |

   (A) 1 2 3 4
   (B) 4 3 2 1
   (C) 2 1 4 3
   (D) 3 1 4 2

47. சங்க கால்தில் தாம் வரைந்த ஓவியங்களை முதலில் ----- என்றே வழங்கியுள்ளனர்.
   (A) ஓவு
   (B) ஓவியம்
   (C) படாம்
   (D) கண்ணெழுத்து

48. வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
   வாழும் முறைமையடி பாப்பா – என்று பாடியவர் யார்.
   (A) ஔவையார்
   (B) கவிமணி
   (C) பாரதியார்
   (D) பாரதிதாசன்

49. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் -------
   (A) மதுரை
   (B) பூம்புகார்
   (C) கோவன் பொட்டல்
   (D) வேங்கை மரம்

50. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

1. சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை அவர்களால் கவரி வீசப்பெற்ற பெருமைக்குரியவர் மோசிகீரனார்
2. மோசிகீரனார் எழுதிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது.
3. வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே – பொன்முடியார்
4. தானை – என்பதின் பொருள் பெருஞ்செல்வம்

(A) 1, 2 சரி
(B) 2, 3 சரி
(C) 2, 3, 4 சரி
(D) அனைத்தும் தவறு

51. மதோன்மத்தர் என்பது யாரைக் குறிக்கிறது.

(A) பரம்பொருள் முருகன்
(B) திருமால்
(C) விஷ்னு
(D) பெரும்பித்தனாகிய சிவபெருமான்

52. பொருத்துக:

| | | |
|---|---|---|
| a. திருப்பூர் | - | 1. போர்வைகள் |
| b. மதுரை | - | 2. பட்டாடைகள் |
| c. உறையூர் | - | 3. கண்டாங்கிச் சேலை |
| d. காஞ்சி | - | 4. சுங்குடிப்புடவைகள் |
| e. சென்னிமலை | - | 5. பின்னலாடைகள் |

(A) 1 2 3 4 5
(B) 5 4 3 2 1
(C) 2 1 4 3 5
(D) 3 2 4 1 5

53. பொருத்துக:

| | | |
|---|---|---|
| a. ஈன்று புறந்தருதல் | - | 1. காளைக்கு கடனே |
| b. சான்றோர் ஆக்குதல் | - | 2. வேந்தற்குக் கடனே |
| c. வேல்வடித்துக் கொடுத்தல் | - | 3. கொல்லற்குக் கடனே |
| d. நன்னடை நல்கல் | - | 4. தந்தைக்குக் கடனே |
| e. களிறு எறிந்து பெயர்தல் | - | 5. என்தலைக்கடனே |

(A) 1 2 3 4 5
(B) 5 4 3 2 1
(C) 5 3 4 2 1
(D) 3 4 5 2 1

54. பள்ளிக்கூடம் வீட்டைப்போன்று இருத்தல் வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும் என்றவர்.
(A) பெரியார்
(B) அண்ணா
(C) காந்தி
(D) தாகூர்

55. வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது என்ற முதுமொழிக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் யார்.
(A) திரு.விக.
(B) மு.வ
(C) அண்ணா
(D) கதிரைவேலர்

56. கீழ்க்கண்ட கூற்றை கவனி.
1. கற்போரின் குற்றங்களை நீக்கி அறம் பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறிவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.
2. உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்பும்.
மேற்கண்ட தொடர்களுடன் தொடர்புடைய நூல் எது.
(A) புறநானூறு
(B) நற்றிணை
(C) கலித்தொகை
(D) முதுமொழிக்காஞ்சி

57. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. அறுவை வீதி | – | 1. பொற்கடை வீதி |
| b. கூல வீதி | – | 2. ஆடைகள் விற்கும் வீதி |
| c. பொன் வீதி | – | 3. தானியக்கடை வீதி |
| d. மன்னவர் வீதி | – | 4. அந்தணர் வீதி |
| e. மறையவர் வீதி | – | 5. மன்னர் வாழும் வீதி |

(A) 1 2 3 4 5
(B) 5 4 3 2 1
(C) 2 3 1 5 4
(D) 4 3 2 5 1

58. முக்கூடற் பள்ளுவின் ஆசிரியர் யார்.
(A) காளமேகப்புலவர்
(B) ராசப்பகவிராயர்
(C) என்னயினாப் புலவர்
(D) பெயர் அறியவில்லை

59. எத்தனை இணை சரி?

1. மேதையில் - கற்றது மறவாமை
2. வண்மையில் - வாய்மையுடைமை
3. இளமையில் - மெய்பணி இன்மை
4. கற்றலின் - கற்றாரை வழிபடுதல்
5. செற்றாரை - செறுத்தலில்
6. குலனுடைமை - நாணுச்சிறந்தன்று
7. நலனுடைமை - கற்புச் சிறந்தன்று

(A) 4 இணை
(B) 5 இணை
(C) 3 இணை
(D) அனைத்தும்

60. பின்வரும் வாக்கியங்களில் அண்ணா கூறாதது எது.

1. பிறரை எதிர்பாரத்து வாழாதவன் தமிழன்
2. கடல் கடந்தவன் தமிழன்
3. முடியுடை வேந்தரின் சந்ததியில் வந்தன் தமிழன்
4. ஏறு நடையுடையான் தமிழன்
5. மானமே பெரிதென மதித்தான் தமிழன்

(A) 1, 2, 3
(B) 4, 5
(C) 1, 4, 5
(D) மேற்கண்ட எதுவுமில்லை

61. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

1. மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது கிழக்கு கோபுரம்.
2. மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் உயரமானது தெற்குக் கோபுரம்.
3. நாயக்கர் மகால் தூண் 82 அடி உயரம் 19 அடி சுற்றளவு கொண்டது.

மேற்கண்டவற்றில் சரியானது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) அனைத்தும் சரி

62. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

1. நயமும் சுவையும் மிக்க பாடல்களை இயற்றி புதுப்புது நூல்களை படைத்தார்
2. தமிழ் பாடம் சொல்லி சொல்லி மாணவர்களை தமிழின்பால் ஈர்த்தார்
3. தேமதுரத் தமிழை உலகெலாம் பரவச் செய்தவர்
4. அருங்குணமும் நிறைந்த புலமையும் தளராத நாவன்மையும் படைத்தவர்
5. சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப்பெற்றார்

மேற்கண்ட கூற்றுக்கு உரியவர்

(A) சாமிநாதர்
(B) மீனாட்சி சுந்தரனார்
(C) பரிதிமாற்கலைஞர்
(D) கோவூர்கிழார்

63. கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாது ------ ஆகும்.

(கசடு, உவப்ப, விழுச்செல்வம், ஏமாப்பு, மாந்தர்)

மேற்கண்ட கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தையை நிரப்புக.

(A) ஏமாப்பு
(B) விழுச்செல்வம்
(C) கசடு
(D) மாந்தர்

64. திரைக்கவித் திலகம் என்று அழைக்கப்படுபவர் யார்.

(A) மக்கள் கவிஞர்
(B) பகுத்தறிவுக் கவிராயர்
(C) மருதகாசி
(D) நா.பிச்சமூர்த்தி

65. கீழ்க்கண்ட கூற்றை கவனி.

1. மீனாட்சி சுந்தரனார் - எண்ணாயிரம் என்ற ஊரில் பிறந்தவர்
2. காளமேகப்புலவர் - எண்ணெய்க் கிராமத்தில் பிறந்தார்.
3. தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர் - உ.வே.சா
4. புறம் பெயரும் பொய்மையெலாம்
   புதுமை பெறும் வாழ்வே – பெருஞ்சித்திரனார்

மேற்காண்பனவற்றில் சரியானது

(A) 1, 2 மட்டும்
(B) 3, 4 மட்டும்
(C) அனைத்தும்
(D) 4 மட்டும்

66. பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்த ஊர் எது.
  (A) திருச்சி
  (B) தஞ்சாவூர்
  (C) மதுரை
  (D) பூம்புகார்

67. நடுகல் வணக்கம் பற்றி கூறும் நூல் எது.
  (A) தண்டியலங்காரம்
  (B) அகத்தியம்
  (C) தொல்காப்பியம்
  (D) நன்னூல்

68. "நாளை என் தாய்மொழி சாகுமானால் - இன்றே நான் இறந்து விடுவேன்" – என்றவர் ரசூல் கம்சதேவ் இவர் எந்த நாட்டு கவிஞர்
  (A) உருசியம்
  (B) கிரேக்கம்
  (C) இரஷ்யம்
  (D) இலத்தீன்

69. பொருத்துக.
  a. பொருட்பெயர் - 1. கண்ணன், நாற்காலி
  b. இடம்பெயர் - 2. வேலூர், நாமக்கல்
  c. காலப்பெயர் - 3. தைத்திங்கள், நண்பகல்
  d. சினைப்பெயர் - 4. முகம், கை
  (A) 1 2 3 4
  (B) 4 3 2 1
  (C) 2 1 4 3
  (D) 3 1 2 4

70. நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுவதாக அமைந்த நூல் -----
  (A) தூது
  (B) அந்தாதி
  (C) பள்ளு
  (D) பரணி

71. கோவூகிழார் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் ----- பாடிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
(A) 14
(B) 16
(C) 18
(D) 20

72. காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா என்றெல்லாம் புனைப்பெயர் கொண்டவர் யார்.
(A) முடியரசன்
(B) வாணிதாசன்
(C) பாரதிதாசன்
(D) கண்ணதாசன்

73. தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு – என்று பாடியவர் யார்.
(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) வாணிதாசன்
(D) வண்ணதாசன்

74. 'வழுமரம் இருக்கும் இடத்திற்கு பறவைகள் நாடிச் செல்வது போல புலவர் வள்ளல்களை நாடிச் செல்வர். நெடுந்தொலைவு நடந்தே செல்வர். துன் ஆற்றலுக்கேற்ப புகழ்ந்து பாடுவர் - என்று யார் யாரிடம் கூறியது.
(A) கோவூர்கிழார், நலங்கிள்ளி
(B) கோவூர்கிழார், நெடுங்கிள்ளி
(C) நெடுங்கிள்ளி, கோவூர்கிழார்
(D) நலங்கிள்ளி, கோவூர்கிழார்

75. அம்மானை
1. ஒரு வகை காய் விளையாட்டு
2. இது பெண்கள் விளையாடுதற்குரியது
3. இவ்விளையாட்டைத் தமிழக மகளிர் பண்பாட்டுத்தொட்டே ஆடி வருகின்றனர்.
4. அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம் முருகன்

மேற்கண்டவற்றில் சரியானது.
(A) 1 மட்டும்
(B) 2, 3 மட்டும்
(C) 1, 4 மட்டும்
(D) அனைத்தும்

76. தாயுமானவருக்கு ஞானநெறி காட்டிய மௌனகுருவும், தமிழரின் முதல் சிறுகதை எழுத்தாளரான வ.வே.சுப்பிரமணியரும் எந்த மண்ணில் பிறந்தவர்கள்
(A) மதுரை
(B) திருச்சி
(C) புதுக்கோட்டை
(D) தேனி

77. "வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – என்ற தொடரின் அணி என்ன?
(A) இயல்பு நவிற்சியணி
(B) உயர்வு நவிற்சியணி
(C) உருவக அணி
(D) இரட்டுறமொழிதல் அணி

78. நேருவின் அறிவாற்றலைக் ----- போற்றிப் புகழ்ந்தனர்.
(இரவுபகல், ஏற்றத்தாழ்வு, பத்திபத்தியாக, கற்றோரும் மற்றோரும்)
கோடிட்ட இடத்தில் சரியாக பொருந்தும் வார்த்தை எது?
(A) இரவுபகல்
(B) ஏற்றத்தாழ்வு
(C) பத்திபத்தியாக
(D) கற்றோரும் மற்றோரும்

79. நன்மை செய்தவர்களை ----- போற்றும் (ஊர்உலகம், ஓடியாஎ, காடுமேடு, உலகம்)
இக்கூற்றில் சரியான விடையைக் காண்க.
அது எவ்வகையான சொற்கள் என்று காண்க.
(A) உலகம், நேரிணை
(B) உலகம், எதிரிணை
(C) ஊர்உலகம், நேரிணை
(D) ஊர்உலகம், எதிரணை

80. கீழ்க்கண்டவற்றை கவனி

1. ஆண் ஓவியர் - ஓவிய மாக்கள்
2. பெண் ஓவியர் - சித்திராங்கதன்
3. ஓவிய கலைஞர் - சித்திரசேனர்

மேற்கண்டவற்றில் எதுதனை இணை சரி
(A) எதுவுமில்லை
(B) 1 இணை
(C) 2 இணை
(D) 3 இணை

81. கீழ்க்கண்டவற்றை கவனி

1. நீரின்றி அமையாது உலகு – திருக்குறள்
2. நீரின்றி அமையாது யாக்கை – திருக்குறள்
3. மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் - சிலப்பதிகாரம்

(A) 1 மட்டும் தவறு
(B) 2 மட்டும் தவறு
(C) 3 மட்டும் தவறு
(D) அனைத்தும் தவறு

82. காளமேகப் புலவர் குறித்து சரியானது எது.

1. திருவரங்கப்கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார்.
2. வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார்.
3. இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.
4. சைவ சமயத்திலிருந்து வைணவ சமயத்திற்கு மாறினார்.

(A) 1, 2 சரி
(B) 3, 4 சரி
(C) 4 சரி
(D) 1, 2, 3 சரி

83. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவோடு புரையுஞ் சீருர் பூவில் - என்ற
பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) புறநானூறு
(B) பரிபாடல்
(C) திருவிளையாடற்புராணம்
(D) சிறுபாணாற்றுப்படை

84. “நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்” என்று ஓவியருக்கு இலக்கணம் வகுத்தவர்.

(A) ந. வேங்கடசாமி நாட்டார்
(B) நச்சினார்க்கினியர்
(C) பரிதிமாற் கலைஞர்
(D) அரும்பதையர் உரை

85. கீழ்க்கண்டவற்றை கவனி

1. புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு.
2. திருச்சி மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தமிழகம் முழுவதும் சென்று தேடித் தொகுத்தார்.
3. தனிப்பாடல்களைக் கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையையும் புலவர்களின் புலமையையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனை இன்பம் முதலியவற்றையும் பெறலாம்.

மேற்கண்டவற்றில் தவறாது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) மேற்கண்ட அனைத்தும்

86. இளைஞர்கள் பிறரிடமிருந்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போது தான் வளரமுடியும். நீங்கள் கடவுளின் குழந்தைகள் சிங்கங்களே எழுந்து வாருங்கள் நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள் - என்று கூறியவர்

(A) அண்ணா

(B) பெரியார்

(C) விவேகானந்தர்

(D) காந்தி

87. "ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தை" என்று யாரைக் குறிப்பிடுகின்றனர்.

(A) கண்ணகி

(B) மணிமேகலை

(C) மாதவி

(D) சுதமதி

88. கீழ்க்கண்டவற்றை கவனி

1. ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமனுஜன் குறைந்தபட்சம் ஒரு ஜகோபி – லிட்டில்வுட்டு.
2. கணிதத் திறமையில் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்ற பிறவிக் கணிதமேதை - இந்திராகாந்தி
3. இராமானுஜன் சாதாரண மனிதரல்லர். அவர் இறைவன் தந்த பரிசு – பேரா. ஈடிபெல்
4. இராமானுஜன் முதல் தரமான கணிதமேதை – லார்ட்மெண்ட் லண்ட்
5. இராமானுஜன் தான் இந்த 20ம் நூற்றாண்டின்ன மிகப்பெரிய கணிதமேதை – பேராசிரியர் சூலியன் கக்சுலி

மேற்கண்டவற்றில் சரியானது.

(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 3, 4, 5
(D) மேற்கண்ட அனைத்தும்

89. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் - என்ற பாடலை பாடியவர் யார்.

(A) பாரதியார்
(B) நாமக்கல் கவிஞர்
(C) பாரதிதாசன்
(D) மருதகாசி

90. எந்த பல்கலைக்கழகம் ராமனுஜர்க்கு எஃப்.ஆர்.எஸ் பட்டம் வழங்கியது.

(A) இந்திய பல்கலைக்கழம்
(B) இங்கிலாந்துப் பல்கலைக்கழம்
(C) இலண்டன் பல்கலைக்கழகம்
(D) அமெரிக்கா பல்கலைக்கழகம்

91. சரியான தொடர் எது.

(A) ஆள்பாதி, ஆடைபாதி ஆடையில்லா மனிதன் அரை மனிதன்
(B) ஆடைபாதி, ஆள்பாதி ஆடையில்லா மனிதன் அரை மனிதன்
(C) ஆடையில்லா மனிதன் அரை மனிதன், ஆள்பாதி, ஆடைபாதி
(D) அரைமனிதன், ஆடையில்லா மனிதன் ஆடைபாதி, ஆள்பாதி

92. கீழ்க்கண்டவற்றை கவனி

1. ஆய்லர் என்பவர் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 18ம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை.
2. ஜகோபி என்பவர் 19ம் நூற்றாண்டில் செருமனியில் வாழ்ந்த கணிதமேதை.
3. 1880ம் ஆண்டில் இலண்டனிலிருந்த கார் என்பவர் பதினைந்தாம் வயதிலேயோ கணிதத்தில் சிறந்து விளங்கினார்.

மேற்கண்டவற்றில் சரியானது.

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) 3 மட்டும் சரி
(D) 1, 2, 3 சரி

93. பொருத்துக.

a. மான் - 1. குட்டி
b. நாய் - 2. கன்று
c. கீரி - 3. குருளை
d. சிங்கம் - 4. பிள்ளை

(A) 2 1 3 4
(B) 1 2 3 4
(C) 4 3 2 1
(D) 3 4 1 2

94. 22.12.1962ம் நாள் இராமானுஜத்தின் ----- பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு ----- காசு அஞ்சல்தலை வெளியிட்டது.

(A) 50, 10
(B) 30, 15
(C) 40, 20
(D) 75, 15

95. அகர வரிசை

(A) சூளை, காளை, சேவல், சிலை
(B) சேவல், சிலை, சொல், செடி
(C) சங்கு, சாவி, சிலை, சீப்பு
(D) சூது, கொடி, செல்வம், சாறு

96. இல்லை என்று வந்தவர்க்கு அவர் ஒருபோதும் இல்லை என்று கூறாதவர் யார்.
   (A) பாரி
   (B) நலங்கிள்ளி
   (C) மருதுபாண்டி
   (D) தொண்டைமான்

97. பொருத்துக(வினைமரபு).
   a. அப்பம் - 1. தூற்று
   b. நெல் - 2. தின்
   c. நீர் - 3. பறி
   d. களை - 4. பாய்ச்சு
   e. இலை - 5. கொய்
   f. மலர் - 6. பறி
   (A) 1 2 3 4 5 6
   (B) 6 5 4 3 2 1
   (C) 4 5 3 2 1 6
   (D) 2 1 4 3 6 5

98. பிரேம் சந்த் ----- மொழியில் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர்
   (A) தமிழ்
   (B) வங்காளம்
   (C) இந்தி
   (D) ஆங்கிலம்

99. நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
   (A) 1900
   (B) 1901
   (C) 1902
   (D) 1911

100. மறைந்து கொண்டிருந்த ஓவியங்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் ------
   (A) சோழர்
   (B) சேரர்
   (C) பாண்டியர்
   (D) பல்லவர்

******